# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண்.23

## 2009, ஜூன் 30, செவ்வாய்க்கிழமை

## திருவள்ளுவர் ஆண்டு 2040, ஆனி 16

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை **9.30** மணிக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:—

" அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர் "

( ஒவ்வொரு சொல்லின் தன்மையையும் உணர்ந்துள்ள நல்ல அறிஞர்கள், அவையில் கூடியிருப்போரின் தன்மையையும் உணர்ந்து அதற்கேற்ப ஆராய்ந்து பேசுவார்கள். )

1. வினாக்கள் – விடைகள்

வரிசை எண்கள் 51 முதல் 60 வரை உள்ள உடுக்குறியிட்ட வினாக்கள் பேரவையில் கேட்கப்பட்டு விடையளிக்கப்பட்டன.

2. சிறப்பு கவன ஈர்ப்பு

கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையத்தில் பிரிக்கால் தொழிற்சாலை தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி காலவரையற்ற உண்ணாவிரதம் இருப்பது குறித்து திருவாளர்கள் எஸ்.வி. சேகர், கோவை தங்கம், தி. வேல்முருகன், சி. கோவிந்தசாமி மற்றும் வை. சிவபுண்ணியம் ஆகியோர் அரசின் கவனத்தை ஈர்த்தனர்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்.

3. குழுக்களின் அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல்

திருமதி டி. யசோதா, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள் 2008-2009-ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் நூற்று ஐம்பத்து மூன்றாவது முதல் நூற்று ஐம்பத்து ஆறாவது வரையிலான ( பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை ) அறிக்கைகளை பேரவைக்கு அளித்தார்.

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் ( அறிமுகம் செய்தல் )

(1) 2009-ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டமுன்வடிவு

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

(2) 2009-ஆம் ஆண்டு திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

..2

5. 2009-2010-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்

2009-2010-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்

கோரிக்கை எண்.24 – சிறைச்சாலைகள் ( உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை )

சிறைச்சாலைகள் ( உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ) மானியக் கோரிக்கை எண்.24-இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.110,54,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

கீழ்க்காணும் உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர் :–

திரு. கோ. எதிரொலி மணியன்
திரு. மு.க. பெரியசாமி
திரு. அ. தமிழரசு
திரு. ஜி.கே. மணி
திரு. இல. வேலுசாமி
திரு. வை. காவேரி
திரு. தி. வேல்முருகன்
திரு. கி. ஆறுமுகம்
திரு. கே.எல். இளவழகன்
திரு. த.அ. மேகநாதன்
திரு. ஆர். எம். பழனிசாமி
திரு. எம்.ஆர். சுந்தரம்
திரு. அருள் அன்பரசு
திரு. விடியல் எஸ். சேகர்
திரு. சி. கோவிந்தசாமி
திரு. கோவை தங்கம்
திரு. ப. டில்லி பாபு
திருமதி ஜி. லதா
திருமதி ராணி வெங்கடேசன்
டாக்டர் க. நெடுஞ்செழியன்
திரு. என். நன்மாறன்
திரு. வே. மாரிமுத்து
திரு. ஞா. ஜாண் ஜோசப்
திருமதி பெ. கமலாம்பாள்
திரு. சி. ஞானசேகரன்
டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி

கோரிக்கை எண்.41 – வருவாய்த் துறை

வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண்.41-இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,146,16,82,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.269,97,71,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

கீழ்க்காணும் உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர் :–

திரு. கோவை தங்கம்
திரு. விடியல் எஸ். சேகர்
திரு. அருள் அன்பரசு
திரு. எம்.ஆர். சுந்தரம்
திரு. ஆர். எம். பழனிசாமி
திரு. மு.க. பெரியசாமி
திரு. இல. வேலுசாமி
திரு. வை. காவேரி
திரு. அ. தமிழரசு
திரு. த.அ. மேகநாதன்
திரு. கே.எல். இளவழகன்

..3

திரு. தி. வேல்முருகன்
திரு. ஜி.கே. மணி
திரு. கி. ஆறுமுகம்
திரு. சி. கோவிந்தசாமி
திரு. வீ.ஏ.டி. கலியவரதன்
டாக்டர் க. நெடுஞ்செழியன்
திரு. என். நன்மாறன்
திரு. வே. மாரிமுத்து
திரு. எஸ். ஜெயபால்
திருமதி ஜி. லதா
திரு. ஞா. ஜாண் ஜோசப்
திரு. ராம. சுப்புராம்
திருமதி பெ. கமலாம்பாள்
டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
திருமதி ரா. லீமா றோஸ்
திருமதி ராணி வெங்கடேசன்
செல்வி கே. பாலபாரதி
திரு. சி. ஞானசேகரன்
டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி

கோரிக்கை எண்.51 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
------------------------------------------------

இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மானியக் கோரிக்கை எண்.51-இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.250,01,91,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

கீழ்க்காணும் உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர் :–

திரு. கோவை தங்கம்
திரு. எம்.ஆர். சுந்தரம்
திரு. அருள் அன்பரசு
திரு. விடியல் எஸ். சேகர்
திரு. ஆர். எம். பழனிசாமி
திருமதி ராணி வெங்கடேசன்
திரு. இல. வேலுசாமி
திரு. வை. காவேரி
திரு. கி. ஆறுமுகம்
திரு. தி. வேல்முருகன்
திரு. கே.எல். இளவழகன்
திரு. த.அ. மேகநாதன்
திரு. அ. தமிழரசு
திரு. ஜி.கே. மணி
திரு. மு.க. பெரியசாமி
திரு. சி. கோவிந்தசாமி
திரு. வீ.ஏ.டி. கலியவரதன்
திரு. ப. டில்லி பாபு
திரு. என். நன்மாறன்
திரு. எஸ். ஜெயபால்
திருமதி ரா. லீமா றோஸ்
திரு. ராம. சுப்புராம்
திரு. சி. ஞானசேகரன்
திருமதி பெ. கமலாம்பாள்
திரு. ஞா. ஜாண் ஜோசப்
திரு. பா. வேல்துரை
திரு. வே. மாரிமுத்து
செல்வி கே. பாலபாரதி
டாக்டர் க. நெடுஞ்செழியன்
திருமதி ஜி. லதா

கோரிக்கை எண்.26 – வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை எண்.26-இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.369,25,99,000/-, மூலதனக் கணக்கில் ரூ.874,12,33,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.220,78,91,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதி கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

கீழ்க்காணும் உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர் :–

திரு. கோவை தங்கம்
திரு. எம்.ஆர். சுந்தரம்
திரு. அருள் அன்பரசு
திரு. விடியல் எஸ். சேகர்
திரு. இல. வேலுசாமி
திரு. வை. காவேரி
திரு. கி. ஆறுமுகம்
திரு. தி. வேல்முருகன்
திரு. கே.எல். இளவழகன்
திரு. த.அ. மேகநாதன்
திரு. ஜி.கே. மணி
திரு. அ. தமிழரசு
திரு. மு.க. பெரியசாமி
திரு. சி. கோவிந்தசாமி
திரு. வே. மாரிமுத்து
திரு. ப. டில்லி பாபு
திரு. என். நன்மாறன்
திரு. பெ.சு. விஜயகுமார்
டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
திரு. ஞா. ஜாண் ஜோசப்
திருமதி பெ. கமலாம்பாள்
டாக்டர் க. நெடுஞ்செழியன்
திருமதி ராணி வெங்கடேசன்
திருமதி ஜி. லதா
திரு. சி. ஞானசேகரன்

மேற்காணும் மானியக் கோரிக்கைகள் மற்றும் வெட்டுத் தீர்மானங்கள் விவாதத்திற்கு வைக்கப்பட்டன.

கீழ்க்காணும் உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர் :–

1. திரு. எஸ்.வி. சேகர்
2. திரு. கூ.ந. சேகரன்
3. திரு. எம்.ஆர். சுந்தரம்
4. திரு. கே.எல். இளவழகன்
5. திரு. என். நன்மாறன்
6. திரு. எஸ். இராசசேகரன்
7. திரு. மா. தண்டபாணி

மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதி கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் ஆகியோர் பதிலுரை வழங்கினார்கள்.

..5

மானியக் கோரிக்கை எண்.24 சிறைச்சாலைகள் ( உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ) மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற அனைத்து வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன அல்லது திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டன.

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களால் மானியக் கோரிக்கை எண்.24-இன் கீழ் கோரப்பெற்ற தொகைகள் குறித்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.41 வருவாய்த் துறை மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற அனைத்து வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன அல்லது திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டன.

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களால் மானியக் கோரிக்கை எண்.41-இன் கீழ் கோரப்பெற்ற தொகைகள் குறித்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.51 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற அனைத்து வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன அல்லது திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டன.

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களால் மானியக் கோரிக்கை எண்.51-இன் கீழ் கோரப்பெற்ற தொகை குறித்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகை முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டது.

மானியக் கோரிக்கை எண்.26 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற அனைத்து வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன அல்லது திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டன.

மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதி கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் மானியக் கோரிக்கை எண்.26-இன் கீழ் கோரப்பெற்ற தொகைகள் குறித்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

பேரவை நிகழ்ச்சி பிற்பகல் **02.19** மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பேரவை, மீண்டும் **2009-**ஆம் ஆண்டு **ஜூலை** திங்கள் **1-**ஆம் நாள் **புதன்கிழமை** காலை **09.30** மணிக்குக் கூடும்.

**மா. செல்வராஜ்,**
**செயலாளர்.**

நாஅ/—